காரைக்காலம்மையார் அருளிச் செய்த
மூத்த திருப்பதிகம் - I

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங் காடே. 1

கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை
விள்ள எழுதி, வெடுவெ டென்ன
நக்கு, வெருண்டு விலங்கு பார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபி ணத்தீச்
சுட்டிட முற்றும் சுளிந்து பூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள் 2
அப்ப னிடம்திரு ஆலங் காடே.

வாகை விரிந்துவெள் நெற்றொ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொ டாண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்ட கத்தே 3
ஆகம் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே.

குண்டிகன்ஒ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன, 'அதனை முன்னே
கண்டிலம் என்று கனன்று பேய்கள்
கையடித்(து) ஒ(டு)இடு காட்ட ரங்கா
மண்டலம் நின்றங்(கு) உளாளம் இட்டு,
வாதித்து, வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்த்(து) ஆடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 4

விழுது நிணத்தை விழுங்க விட்டு,
வெண்தலை மாலை விரவப் பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளி யென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து, முலைகொ டுத்துப்
போயின தாயை வரவு காணா(து)
அழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 5

பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்பேய்
பருந்தொடு. கூகை, பகண்டை, ஆந்தை
குட்டி யிட, முட்டை, கூகைப் பேய்கள்
குறுநரி சென்றணாங் காடு காட்டில்
பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 6

சுழலும் அழல்விழிக் கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடி, ஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான்தடி தின்றணங் காடு காட்டில்,
கழலொலி, ஓசைச் சிலம்பொ லிப்பக்
காலுயர் வட்டணை யிட்டு நட்டம்
அழலுமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 7

நாடும், நகரும் திரிந்து சென்று,
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்ட மாடே,
முன்னிய பேய்க்கணம் சூழச் சூழக்
காடும், கடலும், மலையும், மண்ணும்,
விண்ணும் சுழல அனல்கை யேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 8

துத்தம், கைக்கிள்ளை, விளரி, தாரம்,
உழை, இளி, ஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி, கொக்கரை, தக்கை யோடு,
தகுணிச்சம், துந்துபி, தாளம், வீணை,
மத்தளம், கரடிகை, வன்கை மென்தோல்
தமருகம், குடமுழா, மொந்தை வாசித்(து)
அத்தனை விரவினோ(டு) ஆடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 9

புந்தி கலங்கி, மதிம யங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்டசெந் தீவி ளக்கா
முந்தி அமரர் முழவி னோசை
திசைகது வச்சிலம் பார்க்க ஆர்க்க,
அந்தியின் மாநடம் ஆடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. 10

ஒப்பினை யில்லவன் பேய்கள் கூடி,
ஒன்றினை ஒன்றடித்(து) ஒக்க லித்து,
பப்பினை யிட்டுப் பகண்டை பாட,
பாடிருந் தந்நரி யாழ மைப்ப,
அப்பனை அணிதிரு ஆலங் காட்டெம்
அடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவசக்தி சேர்ந்தின்பம் எய்து வாரே 11

திருச்சிற்றம்பலம்

மூத்த திருப்பதிகம் - ௨

திருச்சிற்றம்பலம்

எட்டி, இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே. 1

நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெறிந்து சூழும் நோக்கிச் சுடலை நவிழ்த் தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக் களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை யேந்தி அழகன் ஆடுமே 2

புட்கள் பொதுத்த புலால்வெண் தலையைப் புறமே நரிகவ்வ
அட்கென் றழைப்ப, ஆந்தை வீச, அருகே சிறுகூகை
உட்க விழிக்க, ஊமன் வெருட்ட, ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே. 3

செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபேய் இரிந்தோடப்
பித்த வேடங் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே. 4

முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி யிடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே. 5

வாளை கிளர வளைவாள் எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கட் டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக் குழகன் ஆடுமே 6

நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருத்தங் குறங்குஞ் சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை யேந்தி அழகன் ஆடுமே. 7

வேய்கள் ஓங்கி வெண்முத் துதிர வெடிகொள் சுடலையுள்
ஓயும் உருவில் உலறு கூந்தல் அலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும் பெருங்காட்டில்
மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே. 8

கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண் டலையும் ஈமப் புகையும் எழுந்த பெருங்காட்டில்
கொடுவெண் மழுவும் பிறையுந் ததும்பக் கொள்ளென் றிசைபாடப்
படுவெண் துடியும் பறையங் கறங்கப் பரமன் ஆடுமே. 9

குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டை படர்ந்த இருள்சூழ் மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமலன் ஆடுமே. 10

சூடும் மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப் பாவம் நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

திருஇரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்த்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண் டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்இருக் குஞ்சென்னி ஈசனுக்கே. 1

ஈசன் அவனல்லாது இல்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து – பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான். 2

பிரானென்று தன்னைப்பன் னாள்பர வித்தொழு வார்இடர்கண்
டிரான்என நிற்கின்ற ஈசன்கண் டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்துபொம் மென்துறைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன் நீள்முடி அந்தணனே. 3

அந்தணனைத் தஞ்சம்என்று ஆட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் – கொந்தணைந்த
பொன்கண்டால் பூணாதே கோள்அரவம் பூண்டானே
என்கண்டாய், நெஞ்சே, இனி. 4

இனிவார் சடையினில் கங்கையென் பாளைஅங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில்என் செய்திகை யிற்சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும்வெந் தன்றுசெந் தீயின்மூழ்கத்
தனிவார் கணையொன்றி னால்மிகக் கோத்தஎம் சங்கரனே. 5

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை – அங்கொருநாள்
ஆவாஎன்று ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை. 6

உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு கேட்கின்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றுந் தொடேல்இழிந் தோட்டத்தெங்கும்
திரைக்கின்ற கங்கையுந் தேன்நின்ற கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித் தலைவைத்த வேதியனே. 7

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்(கு)
ஆதியனை ஆதிரைநன் னாளானைச் – சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாஎன்றான் கீழ். 8

கீழ யினதுன்ப வெள்ளக் கடல்தள்ளி உள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்,விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டன்எண் தோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளுந் தலைநின்மினே. 9

தலையாய ஐந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர் – தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். 10

கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்தும் நில்லா வினைநிகர் ஏதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம் மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்அடுந் தொல்வினையே 11

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. 12

நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச மேஇங்கொர் தஞ்சமென்று
மனையா ளையும்மக்கள் தம்மையுந் தேறிஓர் ஆறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன், நந் தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான் அண்ட வாணன் அடித்தலமே. 13

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த வாறென் - முடித்தலத்தின்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ. 14

நீநின்று தானவர் மாமதில் மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட வாறென் திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா டரங்கப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யும் மொய்கழற் புண்ணியனே 15

புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் - திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு. 16

அன்பால் அடைவதெவ் வாறுகொல் மேலதோ ராடரவம்
தன்பால் ஒருவரைச் சாரவொட் டாது அதுவேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள் கோத்தவை ஆர்த்துவெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர் ஏறுகந் தேறுவதே. 17

ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்,
ஆறெலாம் பாயும் அவிர்சடையார் - வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர்ச் சூழ்ந்த
துடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. 18

தமக்கென்றும் இன்பணி செய்திருப் பேமுக்குத் தாமொருநாள்
எமக்கென்று சொன்னால் அருளுங்கொ லாமிணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பொறாதுட னேகொண்ட உத்தமரே. 19

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமுன் - உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. 20

திருச்சிற்றம்பலம்

அற்புதத் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப(து) இடர். 1

இடர்களையா ரேனும் எமக்குஇரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர்உருவில்
என்புஅறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்புஅறா(து) என்நெஞ்ச வர்க்கு. 2

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவது அல்லால் - பவர்ச்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்(கு)
ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள். 3

ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால்
கேளாத(து) என்கொலோ கேளாமை - நீளாகம்
செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மைஆட் கொண்ட இறை. 4

இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கம் செய்வான் - இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான். 5

வானத்தான் என்பாரும் என்கமற்(று) உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க - ஞானத்தான்
முன்நஞ்சத் தால்இருண்ட மொய்ஒளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான். 6

யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்நெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானே அக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக்(கு) ஆளாயி னேன். 7

ஆயினேன் ஆள்வானுக்(கு) அன்றே பெறற்கரியன்
ஆயினேன் அஃதன்றே ஆமாறு - தூய
புனற்கங்கை ஏற்றான்ஓர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை ஏற்றான் அருள். 8

அருளே உலகெலாம் ஆள்விப்ப(து) ஈசன்
அருளே பிறப்பறுப்ப(து) ஆனால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு. 9

எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய(து) ஒன்று. 10

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றே காண்
கங்கையான் திங்கள் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்(கு) ஆளாம் அது. 11

அதுவே பிரானாமா(று) ஆட்கொள்ளு மாறும்
அதுவே இனிஅறிந்தோம் ஆனால் - அதுவே
பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. 12

தகவுடையார் தாம்உளரேல் தாரகலம் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் - மிகஅடர
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவம் தான். 13

தானே தனிநெஞ்சம் தன்னைஉயக் கொள்வான்
தானே பெருஞ்சேமம் செய்யுமால் - தானே ஓர்
பூணாகத் தால்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து. 14

நினைந்திருந்து வானவர்கள் நீள்மலரால் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார் - நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்(கு)
என்செய்வான் கொல்லோ இனி. 15

இனியோநாம் உய்ந்தோம் இறைவன் அருள்சேர்ந்தோம்
இனிஓர் இடர்இல்லோம் நெஞ்சே - இனி ஓர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். 16

காண்பார்க்கும் காணலாம் தன்மையனே கைதொழுது
காண்பார்க்கும் காணலாம் காதலால் - காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்(கு)
ஆதியாய் நின்ற அரன். 17

அரன்என்கோ நான்முகன் என்கோ அரிய
பரன்என்கோ பண்புணர மாட்டேன் - முரண்அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை
யானவனை எம்மானை இன்று. 18

இன்று நமக்குஎளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை - என்றும்ஓர்
மூவா மதியானை மூவேழ் உலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. 19

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன். 20

அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல்காற் றாவான் - அவனே
இயமான னாய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. 21

வந்திதனைக் கொள்வதே ஒக்கும்இவ் வாள்அரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ - வந்துஓர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
பிரானீர்உம் சென்னிப் பிறை. 22

பிறையும் புனலும் அனலரவும் சூடும்
இறைவர் எமக்குஇரங்கா ரேனும் - கறைமிடற்ற
எந்தையார்க்(கு) ஆட்பட்டேம் என்றென்(று) இருக்குமே
எந்தையா உள்ளம் இது. 23

இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமா(று)
இதுவன்றே என்றனக்கோர் சேமம் - இதுவன்றே
மின்னும் சுடர்உருவாய் மீண்டுஆய்என் சிந்தனைக்கே
இன்னும் சுழல்கின்ற(து) இங்கு. 24

இங்கிருந்து சொல்லுவ(து)என் எம்பெருமான் என்னாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும் - பொங்கிரவில்
ஈமவனத்து ஆடுவதும் என்னுக்(கு)என்று ஆராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று. 25

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பில் - ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
அக்கயலே வைத்த அரவு. 26

அரவம்ஒன்(று) ஆகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழு(து)இரந்தோம் பன்னாள் - முரண்அழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண். 27

பூணாக ஒன்று புனைந்(து)ஒன்று பொங்(கு) அதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக் - கோள்நாகம்
பொன்முடிமேல் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்(கு)
என்முடிவ தாக இவர். 28

இவரைப் பொருள்உணர மாட்டாதார் எல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர் - இவர்தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்புஅணிந்த
பேய்க்கோலம் கண்டார் பிறர். 29

பிறர்அறிய லாகாப் பெருமையரும் தாமே
பிறர்அறியும் பேர்உணர்வும் தாமே - பிறருடைய
என்பே அணிந்(து)இரவில் தீயாடும் எம்மானார்
வன்பேயும் தாமும் மகிழ்ந்து. 30

மகிழ்தி மடநெஞ்சே மானுடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமம் சேர்ந்தாய் - இகழாதே
யாரென்பே யேனும் அணிந்(து) உழல்வார்க்கு ஆட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. 31

பெருகொளிய செஞ்சடைமேல் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்(து)ஒழுகிற்(று) ஒக்கும் - தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல். 32

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே - மேல் உலந்த(து)
எக்கோலத்(து) எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்(து) அவ்வுருவே ஆம். 33

ஆமாறு அறியாவே வல்வினைகள் அந்தரத்தே
நாமாள்என்(று) ஏத்தார் நகர்மூன்றும் - வேமா(று)
ஒருகணையால் செற்றானை உள்ளத்தால் உள்ளி
அருகணையா தாரை அடும். 34

அடும்கண்டாய் வெண்மதிஎன்(று) அஞ்சி இருள்போந்(து)
இடம்கொண்(டு) இருக்கின்ற(து)ஒக்கும் - படம்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு. 35

மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்(து)உழலும் ஆஆ - உறுவான்
தளரமீது ஓடுமேல் தான்அதனை அஞ்சி
வளருமோ பிள்ளை மதி. 36

மதியா அடல்அவுணர் மாமதில்மூன்(று) அட்ட
மதியார் வளர்சடையி னானை - மதியால்
என்பாக்கை யால்இகழாது ஏத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. 37

ஈண்டொளிசேர் வானத்(து) எழுமதியை வாளரவம்
தீண்டச் சிறுகியதே போலாதே - பூண்ட(து)ஓர்
தார்ஏறு பாம்புடையான் மார்பில் தழைந்திலங்கு
கூர்ஏறு கார்ஏனக் கொம்பு. 38

கொம்பினைஓர் பாகத்துக் கொண்ட குழகன்தன்
அம்பவள மேனி அதுமுன்னம் - செம்பொன்
அணிவரையே போலும் பொடிஅணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து. 39

மறித்து மடநெஞ்சே வாயாலும் சொல்லிக்
குறித்துத் தொழுந்தொண்டர் பாதம் - குறித்(து)ஒருவர்
கொள்ளாத திங்கள் குறுங்கண்ணி கொண்டார் மாட்(டு)
உள்ளாதார் கூட்டம் ஒருவு. 40

ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்
நின்னுருவ மாக நிறம்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. 41

நேர்ந்(து)அரவம் கொள்ளச் சிறுகிற்றோ நீஅதனை
ஈர்ந்தளவே கொண்(டு)இசைய வைத்தாயோ - பேர்ந்து
வளம்குழவித் தாய்வளர மாட்டாதோ என்னோ
இளம்குழவித் திங்கள் இது. 42

திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென்(று) ஊர்திரியேல்
எங்கள் பெருமானே என்(று)இரந்து - பொங்(கு)ஒளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே
தானே அறிவான் தனக்கு. 43

தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு என்கொல் ; - மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். 44

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்தன் பேரருளே வேண்டிப் - பிரானவனை
எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க்(கு) எளிது. 45

எளிய(து) இதுஅன்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர் ஆஆ - ஒளிகொள்மிடற்(று)
எந்தைஅராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழும் திறம். 46

திறத்தால் மடநெஞ்சே சென்றடைவ தல்லால்
பெறத்தானும் ஆதியோ பேதாய் - நிறத்த
இருவடிக்கண் ஏழைக்கு ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு. 47

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒருநாள்
இதுமதிஎன்(று) ஒன்றாக இன்றளவும் தேரா(து)
அதுமதிஒன் றில்லா அரா. 48

அராவி வளைத்தனைய அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய ஓடி - விராவுதலால்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தால் போலாவே
தன்னோடே ஒப்பான் சடை. 49

சடைமேல்அக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும் - முடிமேல்
வலப்பாலக் கோலமதி வைத்தான்தன் பங்கின்
குலப்பாவை நீலக் குழல். 50

குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்(து)
எழிலாக வைத்(து)ஏக வேண்டா - கழல் ஆர்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீஆடும் அங்கு. 51

அங்கண் முழுமதியம் செக்கர் அகல்வானத்து
எங்கும் இனி(து)எழுந்தால் ஒவ்வாதே - செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 52

சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேண்உலவி
நீரார்ந்த பேர்யாறு நீத்தமாய்ப் - போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்ஈசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேஓர் கார். 53

காருருவக் கண்டத்(து)எம் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஒருருவாய் நின்னோ(டு) உழிதருவான் - நீருருவ
மேகத்தால் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு. 54

பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டம் கறுத்ததுவும் அன்றியே - உண்டு
பணிஉறுவார் செஞ்சடைமேல் பால்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 55

வடுவன்(று) எனக்கருதி நீமதித்தி ஆயின்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய் - படுவெண்
புலால்தலையின் உள்ஊண் புறம்பேசக் கேட்டோம்
நிலாத்தலையில் சூடுவாய் நீ. 56

நீஉலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவுஒழியச் செல்கண்டாய் - தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடஅரவம் மேலாட மிக்கு. 57

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே - செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்தன் பொன்னுருவில்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு. 58

பண்(பு)உணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா - பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவ(து)
எவ்வுருவோ நின்உருவம் மேல். 59

மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே - மாலாய
கைம்மா மதக்களிற்றுக் காருரிவை போர்த்தபோ(து)
அம்மான் திருமேனி அன்று. 60

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றும்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்(கு) என்உரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது. 61

ஏதுஒக்கும் ஏதுஒவ்வா(து) ஏதாகும் ஏதாகா(து)
ஏதுஒக்கும் என்பதனை யார் அறிவார் - பூதப்பால்
வில்வேட னாகி விசயனோடு ஏற்றநாள்
வல்வேடன் ஆன வடிவு. 62

வடிவுடைய செங்கதிர்க்கு மாறாய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்கும் கொல்லோ - கடிஉலவு
சொன்முடிவொன்(று) இல்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேல் திங்கள் நிலா. 63

நிலாஇலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ - நிலாஇருந்த
செக்கர்அவ் வானமே ஒக்கும் திருமுடிக்கே
புக்கரவம் காலையே போன்று. 64

காலையே போன்றிலங்கும் மேனி ; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை ; மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. 65

மிடற்றில் விடமுடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறோ - மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பில் பாம்பு. 66

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழ்அருவி தாங்குதலால் - ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. 67

சிலம்படியாள் ஊடலைத் தான்தவிர்ப்பான் வேண்டுஞ்
சிலம்படிமேல் செவ்வரத்தம் சேர்த்தி - நலம்பெற்(று)
எதிராய செக்கரினும் இக்கோலம் செய்தான்
முதிரா மதியான் முடி. 68

முடிமேல் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோம் கூற்றைப் - படிமேல்
குனியவல மாம்அடிமை கொண்டாடப் பெற்றோம்
இனிஅவலம் உண்டோ எமக்கு. 69

எமக்(கு)இதுவோ பேராசை என்றும் தவிரா(து)
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் - அமைக்கவே
போந்(து)எரிபாய்ந் தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்(து)எரிபாய்ந்(து) ஆடும் இடம். 70

இடப்பால வானத்து எழுமதியை நீஓர்
மடப்பாவை தன்னருகே வைத்தால் - இடப்பாகம்
கொண்டாள் மலைப்பாவை கூறொன்றும் கண்டிலம்யாம்
கண்டாயே முக்கண்ணாய் கண். 71

கண்(டு)எந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் - துண்டம்சேர்
விண்ணாளும் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதுஎன் கருத்து. 72

கருத்தினால் நீகருதிற்(று) எல்லாம் உடனே
திருத்தலாம் சிக்கெனநான் சொன்னேன் – பருத்தரங்கம்
வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது. 73

ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்(து)அட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் – பேதையர்கள்
எண்ணா(து) இடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். 74

கலங்கு புனல்கங்கை ஊடால லாலும்
இலங்கு மதிஇயங்க லாலும் – நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேல் பாம்பியங்க லாலும்
விரிசடையாம் காணில் விசும்பு. 75

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடம் தேய்ப்ப – முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி. 76

அடிபேரில் பாதாளம் பேரும் அடிகள்
முடி பேரில் மாமுகடு பேரும் – கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா(து) அரங்கு. 77

அரங்கமாய்ப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய் – இரங்கும்மேல்
என்னாக வையான்தான் எவ்வுலகம் ஈந்(து)அளியான்
பன்னாள் இரந்தால் பணிந்து. 78

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத் - துணிந்தும்
எந்தையார்க்(கு) ஆட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க்(கு) உள்ள செருக்கு. 79

செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னின்று அடர்த்த - திருத்தக்க
மாலயனும் காணா(து) அரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால். 80

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீஅம்(பு) எய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. 81

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொழுந்தின் பெற்றியதாம் - தேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிரும் சாயும் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின். 82

மின்போலும் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலும் காண்பார்கட்(கு) என்றிரேல் - தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றும் தாம்உடனே
நிற்கின்ற போலும் நெடிது. 83

நெடிதாய பொங்(கு)எரியும் தண்மதியும் நேரே
கடிதாம் கடுஞ்சுடரும் போலும் - நெடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினில்அழியக்
கண்டாலும் முக்கணான் கண். 84

கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணோர்
எரியாடி என்(று)என்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். 85

பெறினும் பிறிதுயாதும் வேண்டேம் நமக்குஈ(து)
உறினும் உறாதுஒழியு மேனும் - சிறி(து) உணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம். 86

நாமாலை சூடியும் நம்ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்(து)அன்பாய் - நாம்ஓர்
அறிவினையே பற்றினால் எற்றுஏ(து) அடுமே
எறிவினையே என்னும் இருள். 87

இருளின் உருஎன்கோ மாமேகம் என்கோ
மருளில் மணிநீலம் என்கோ - அருள்எமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத்(து) ஒளி. 88

ஒளிவிலி மன்மதனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தனையில் சேர்வாய் - ஒளிநஞ்சம்
உண்டவாய் அஃதிருப்ப உன்னுடைய கண்டம்இருள்
கொண்டவா(று) என்இதனைக் கூறு. 89

கூறுஎமக்குஈ(து) எந்தாய் குளிர்சடையை மீ(து)அழித்திட்டு
ஏற மிகப்பெருகின் என்செய்தி - சீறி
விழித்(து)ஊரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்(து)ஓடும் கங்கைத் திரை. 90

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாம்உணர்ந்தோம் கண்டீர் - தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே 91
எம்மைப் புறம்உரைப்பது என்.

என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையனும் - பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்(கு) 92
அருளாக வைத்த அவன்.

அவன்கண்டாய் வானோர் பிரானாவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள வண்ணன் - அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன் நெஞ்சே 93
மெய்த்(து)அமர்ந்(து)அன் பாய்நீ விரும்பு.

விருப்பினால் நீபிரிய கில்லாயோ வேறா
இருப்பிடம் மற்(று) இல்லையோ என்னோ - பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க 94
அஞ்சுமோ சொல்லாய் அவள்.

அவளோர் குலமங்கை பாகத்(து) அகலாள்
இவளோர் சலமகளும் ஈதே - தவளநீ(று)
என்பணிவீர் என்றும் பிரிந்தறியீர் ஈங்(கு)இவருள் 95
அன்புஅணியார் சொல்லுமின் இங்(கு) ஆர்.

ஆர்வல்லார் காண அரன்அவனை அன்பென்னும்
போர்வை அதனாலே போர்த்தமைத்துச் - சீர் வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சின் உள்ளடைத்து 96
மாயத்தால் வைத்தோம் மறைத்து.

மறைத்(து)உலகம் ஏழினிலும் வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ - நிறைத்திட்(டு)
உளைந்துளெழுந்(து) நீளரிப்ப மூவுலகும் உள்புக்(கு)
அளைந்துளெழுந்த செந்தீ அழல். 97

அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ - கழலாடப்
பேயாடு கானில் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. 98

செப்பேந்(து) இளமுலையாள் காணவோ தீப்படுகாட்(டு)
அப்பேய்க் கணம்அவைதாம் காணவோ - செப்(பு)எனக்(கு)ஒன்(று)
ஆகத்தான் அங்காந்(து) அனல்உமிழும் ஐவாய
நாகத்தாய் ஆடும் நடம். 99

நடக்கின் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கல்
பொரும்ஏறோ ஆன்ஏறோ பொன்ஒப்பாய் நின்(ஏறு)
உரும்ஏறோ ஒன்றா உரை. 100

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினால் காரைக்கால் பேய்சொல் - பரவுவார்
ஆராத அன்பினோ(டு) அண்ணலைச்சென்(று) ஏத்துவார்
பேராத காதல் பிறந்து. 101

திருச்சிற்றம்பலம்